ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 61/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 63/2008). திருவாளர்கள் பி.கே. சேகர்பாபு, எல். ரவிச்சந்திரன் மற்றும் செ.ம. வேலுசாமி ஆகியோர் இதற்கான அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அவர்களில் ஒருவர் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழியலாம்.

"1-8-2008 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2008) இப்பேரவை நிராகரிக்கின்றது."

2008 நவம்பர் 14] [பேரவைத் தலைவர்]

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"4-8-2008 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2008) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கு.ப. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-20

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 63/2008)[@] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் அவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. தீர்மானங்களின்மீது யாராவது ஒருவர் மிகச் சுருக்கமாகப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டத்தை, மீண்டும் தனி அலுவலர்களை நியமிக்கக்கூடிய இந்த நீட்டிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஏற்கெனவே முதற்கட்டமாகத் தேர்தலை நடத்தி, உங்களுடைய கட்சியினுடைய, கூட்டணியினுடைய குளறுபடி

[@] 14-11-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

காரணமாக இரத்துச் செய்துவிட்டார்கள். அதற்குப் பின்னர். 6 மாதத்தில் தேர்தலை நடத்துவோம் என்று சட்டமன்றக் கட்சிகளின் உறுப்பினர்களோடு பேசி முடிவெடுத்து, அதை அறிவித்தும் விட்டார்கள். 6 மாதமாகியும், இன்னும் தனி அலுவலர்களை நியமிப்பதை விட்டுவிட்டு தேர்தலைச் சந்திக்க இயலாத சூழ்நிலையில் மட்டுமல்லாமல், திரு. வைத்தியநாதன் கமிட்டியினுடைய அறிக்கை அடிப்படையில் இன்று அரசு நபார்டு வங்கியோடு ஒப்பந்தமிட்டதாக அறிந்தேன். அப்படி வைத்தியநாதன் கமிட்டியினுடைய அறிக்கையின் அடிப்படையில் தனி அதிகாரிகளை நியமிக்கக்கூடாது என்பதையும், அந்தக் கமிட்டியில் தமிழகத்தினுடைய அதிகாரிகளே மேற்பார்வையிடக்கூடாது என்று இருக்கக்கூடிய நிலையில், இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது? தேவையிருந்தால் தேர்தலை நடத்துவீர்கள்; தேவை இல்லையென்றால், அதைத் தட்டிக் கழிக்கக்கூடிய, தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருக்காத, அரசினுடைய இந்தச் சட்டத் திருத்தம் வழிவகுக்கிறது. இதை இரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டு, தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள், வைத்தியநாதன் கமிட்டியினுடைய அறிக்கையைப்பற்றிச் சொன்னார்கள். அந்த அறிக்கையை, இந்த அரசாங்கம் அமைச்சர்கள் குழு ஒன்றை நியமித்து, ஆய்வு செய்து, அதை முழுமையாக ஏற்று, அதை அமல்படுத்த வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. அந்த அடிப்படையிலேதான் தேர்தலை அறிவித்து, தேர்தல்கூட நாங்கள் நடத்த ஆரம்பித்தோம். அதற்கிடையிலே கூட்டுறவுத் தேர்தல் தொடர்பாக ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கின்ற காரணத்தினால்தான் தேர்தலை நடத்த முடியவில்லை. எனவேதான், இந்தத் தனி அலுவலர் பதவியை மேலும் 6 மாதத்திற்கு நீட்டித்துத் தர வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

2008 நவம்பர் 14]

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைத்தியநாதன் கமிட்டி அறிக்கையைப் பொறுத்தமட்டில், அகில இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலங்களும் இந்த அறிக்கையை அமல்படுத்தி, மத்திய அரசிடமிருந்து கூட்டுறவுத் துறை வளருவதற்கு நிறைய நிதிகளைப் பெற்றிருக்கிறார்கள். எனவே. வைத்தியநாதன் கமிட்டியினுடைய பரிந்துரைகளை ஏற்று மத்திய அரசின் நிதியைப் பெறவேண்டுமென்று வலியுறுத்தி, கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரைவிலே தேர்தலை நடத்துவதற்கு காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி, இந்தத் தீர்மானத்தை வரவேற்று, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், நீதிமன்றத்திலே வழக்கு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நோக்க காரண விளக்கத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்று சொன்னால், இது சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, இந்தத் தேர்தலை எப்படி நடத்துவது என்று உத்தேசித்துக்கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிக் குறிப்பிடப்பட்டிருக்கிறபோது, ஏன் கடந்த 6 மாத காலமாக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசவில்லை? ஏற்கெனவே உங்கள் ஆட்சிக் காலத்திலேதான் கூட்டுறவுத் தேர்தலை நடத்தினீர்கள். அது முடிந்து, இப்போது 7½ ஆண்டுகள் முடிந்து, இப்பொழுது மீண்டும் 6 மாதங்கள்; ஆக, 8 ஆண்டுகளாக, அதை நிலை உயர்த்தியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள்; வழக்கு இருக்கிறதென்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த வழக்கு முடிவதற்கு ஏன் அதைத் துரிதப்படுத்தவில்லை. இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொன்னால் எப்படி உள்ளாட்சிகளுக்குத் தனியாக அங்கே தேர்தல் ஆணையர் இருக்கிறாரோ, அதுபோன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தலை நடத்துவதற்குத் தனியாகத் தேர்தல் அலுவலரை நியமிக்க வேண்டுமென்கிற கருத்தையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இந்தத் தேர்தலிலே அரசியல் தலையீடு என்பது அதிகமாக இருக்கிறது. அரசியல் தலையீடு இல்லாமல், இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்துவதற்கான முயற்சியை இந்த அரசு எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் கேட்டு, அமர்கிறேன்.

[2008 நவம்பர் 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நோக்க காரண விளக்கத்திலே சொல்லப்பட்டிருப்பது, அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, இந்தத் தேர்தலை எப்படி நடத்துவது என்று முடிவு செய்வோம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னால், அது உண்மை. ஆனால், வழக்கு நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினால், அந்த நேரத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி நாம் ஆலோசனை செய்தால், அதுவே Contempt of Court ஆகிவிடும். அதனால்தான் இந்த அரசாங்கம் கோர்ட்டிலே இருக்கக்கூடிய அந்த வழக்கை விரைவுபடுத்தி, அதிலே ஒரு தீர்ப்பு வாங்குவதற்காக முயற்சியைச் செய்துகொண்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பு வந்துவிடுமானால் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டுப் பேசி, விரைவில் வைத்தியநாதன் கமிட்டியினுடைய அறிக்கையையொட்டித் தேர்தலை நடத்துவதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் இந்த அரசாங்கம் செய்யும்.

பிற்பகல் 2-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மகேந்திரன், அமைச்சர் பதில் சொன்ன பிறகு திரும்பத் திரும்ப எழுந்து நின்றால் என்ன அர்த்தம் ?

திரு. கே. மகேந்திரன்: அமைச்சர் இன்னும் பதில் சொல்லவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அலுவலர்களுக்கான பதவிக் காலம் நீட்டிப்பு என்பது, ஏறேகுறைய 2001 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு ஒரு முறை இதுபோன்ற ஒரு சட்டம் இந்தப் பேரவையிலே கொண்டு வரப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் 2006 ஆம் ஆண்டிலே ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்பாக கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நடத்தப்பட்டு முறைகேடுகள் நடந்த காரணத்தினால், அந்தத் தேர்தல்கள் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டத்தைக் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பாக கொண்டு வரும்போதே, இந்தத் தனி அலுவலர்களுக்கான பதவிக் கால நீட்டிப்பு என்பது இத்தோடு நிறைவுபெற வேண்டும், கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று அன்றைக்கே நாங்கள் வலியுறுத்தினோம். மீண்டும், மீண்டும், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான சட்டம் கொண்டு வருவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நாங்கள் எதிர்க்கிறோம்.

2008 நவம்பர் 14]

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற தடவையும் இதே சட்டத்தைக் கொண்டு வந்தபோது, கடைசியாக இந்தச் சட்டத் திருத்தம் இருக்கும்; ஆறு மாதங்களுக்குள் தேர்தலை நடத்திவிடுவோம், அதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்கள்—சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டிப் பேசி, சுமுகமாக இந்தத் தேர்தலை நடத்துவோம் என்ற வாக்குறுதியை அளித்தீர்கள். இப்பொழுது மீண்டும் ஆறு மாத காலம் என்று வருகின்றபோது, குறிப்பாக, அதனால் விவசாயிகளும் பாதிக்கப்படுகிறார்கள்; கடன் கொடுப்பதிலே பாரபட்சம் காட்டப்படுகிறது. ஆகவே, இப்பொழுது அங்கே வேலை பார்த்துக்கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்காமல் இருக்கின்றது. 50 சதவீதம் பிடித்து வைத்திருக்கின்றார்கள். இப்படியெல்லாம் இந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே இடர்ப்பாடுகள் இருக்கின்றன. ஆகவே, இடர்ப்பாடுகள் அறவே போக்கப்பட வேண்டுமானால், உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தலை உடனே நடத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியாவது தேர்தலை மிக விரைவாக நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அவர்கள் குறிப்பிட்டதைப்போல், சட்டமன்றக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசுவதிலே எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. பேசுவதாகத்தான் இருக்கிறோம். ஆனால், இன்றைக்கு வழக்குகள், உயர் நீதிமன்றத்தில் 28 வழக்குகள் போடப்பட்டதில், 13 வழக்குகள்தான் முடிவுபெற்றிருக்கின்றன. பாக்கி 15 வழக்குகள் இன்னும் நிலுவையில் இருக்கின்றன. கோர்ட்டிலே வழக்கு இருக்கும்போது நாம் தேர்தலை நடத்துவோமேயானால், அது கோர்ட்டுக்கு விரோதமாக அமையுமே என்பதைக் கருத்தில் கொண்டுதான் இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவை வைத்திருக்கிறோம். நிச்சயமாக இந்தத் தேர்தலை, கோர்ட் முடிவு எடுத்த பிறகு நாங்கள் நடத்துவதற்காகத்தான் இருக்கிறோம். தேவைப்பட்டால் இதிலே நடந்திருக்கிற விஷயங்களைப்பற்றிச் சொல்ல உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றாலும், செல்ல வேண்டிய சூழ்நிலை இருந்தாலும் இருக்கலாம் என்பதையும்

நான் இங்கே தெரிவித்து, அமைகிறேன். எப்படியும் இந்த முறை நீங்கள் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பைக் கொடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகையினால், பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவேற்றிக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "4-8-2008 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2008) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்னும் திரு. எல். ரவிச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 63/2008) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

2008 நவம்பர் 14] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS